2018 ஜனவரி 12] [திரு. டி. ஜெயக்குமார்]

ஆழ்கடல் மீன்பிடிப்பு வளர்ந்து வருகின்ற தற்போதைய சூழ்நிலையில், பொதுவாகவே அண்மைக் கடல் மீன்பிடிப்பு (offshore fishing) என்பது குறைந்துகொண்டே வருகின்ற ஒரு நிலை இருக்கின்றது. எனவே, ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கின்ற சூழ்நிலைக்கு நம்முடைய மீனவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதாகும். எனவே, 240 horsepower–க்கு மேலாக இருக்கின்ற என்ஜின்கள், 24 மீட்டருக்குமேல் உள்ள விசைப் படகுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ய வேண்டுமெனில், 1983 ஆம் ஆண்டைய Marine Fishing Regulation Act–ஐத் திருத்தம் செய்வதன் மூலமாகத்தான் அதை நாம் அமல்படுத்த முடியும். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே, மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு வசதியாக அந்தச் சட்டம் திருத்தப்படும்போது இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் எதிர்காலத்தில் இருக்காது என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது.

(ஆ) சென்னை, யானைக்கவுனி பாலப் பணிகள் விரைந்து முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, என்ன, சொல்லுங்கள்.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மேம்பால நாயகன் எங்கள் ஆருயிர்த் தளபதி அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) வரன் பார்க்காமலேயே நிச்சயதார்த்தத்தை முடிவு செய்வதுபோல், அரிசி இல்லாமலேயே உலை வைப்பதுபோல், அஸ்திவாரம் தோண்டாமலேயே கிரகப்பிரவேசத்திற்கு நாள் குறிப்பதுபோல், நயினார் பாலம் என்று சொல்லப்படுகின்ற யானைக்கவுனி பாலத்தில் 2016 ஆம் ஆண்டே இரயில்வே துறை போக்குவரத்தைத் தடை செய்துவிட்டது. 2016 ஆம் ஆண்டு முடிந்து 2017 கடந்து, தற்போது 2018–ஐ நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. திரும்பவும் 2019–ஐ நோக்கிச் செல்லாமல், இந்த 2018 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாவது இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்குத்தான் இந்தக் கவன ஈர்ப்பு.

இந்த யானைக்கவுனி மேம்பாலம் வால்டாக்ஸ் ரோடு, இராஜா முத்தையா சாலையை இணைக்கின்ற பாலம். கிட்டத்தட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலைத் தொடங்கி இந்தப்புறம்

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜனவரி 12

வண்ணாரப்பேட்டை, வியாசர்பாடி, அயன்புரம் போன்ற அனைத்துப் பகுதிகளையும் ஒருங்கிணைக்கின்ற பாலம். இந்தப் பாலத்தை மூடுவதற்குமுன்பு வீட்டிலிருந்து புறப்பட்டால் 10 நிமிடங்களில் சட்டமன்றத்திற்குக்கூட வந்து சேர்ந்துவிடுவோம். இப்பொழுது ஒரு மணி நேரம் ஆகிறது. இதனால், பணிக்குச் செல்பவர்கள், பள்ளிக்குச் செல்பவர்கள், சுமை தூக்குவோர் என அனைத்துத் தரப்பு மக்களும் பாதிப்புக்குள்ளாகி, சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதிலே கவனம் செலுத்தி, இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க இரயில்வே துறையை வற்புறுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுதான் இப்பாலத்தை இடிக்கின்ற பணிக்கு tender கோரப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது, அந்தப் பாலத்தை இடிக்கும் பணியை முடித்து, 50:50 சதவிகித பணத்தில், மாநில அரசின் 50 சதவிகித பணத்தை ஒதுக்கீடு செய்து, பாலப் பணியைத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில், வால்டாக்ஸ் சாலை மற்றும் இராஜா முத்தையா சாலையை இணைக்கும் யானைக்கவுனி பாலச் சாலையில் அமைந்துள்ள யானைக்கவுனி பாலம் இரயில்வே துறையைச் சார்ந்ததாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அதைக் குறிப்பிட்டார்கள். இந்தப் பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகு சாலைப் பகுதி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பாலம் தற்போது மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் செல்வதற்கு இரயில்வே துறை மற்றும் போக்குவரத்துக் காவல் துறையால் தடை செய்யப்பட்டுள்ளது.

2018 ஜனவரி 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

இப்பாலத்தில் இருசக்கர வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பாலத்தின் கீழுள்ள இருப்புப் பாதையில் கூடுதலாக இருப்புப் பாதை அமைக்க ஏதுவாக பாலத்தின் இரயில்வே பகுதி நீளத்தை 47 மீட்டரிலிருந்து 150 மீட்டருக்கு அகலப்படுத்த இரயில்வே துறை உத்தேசித்துள்ளது. இப்பாலத்தை இடித்துவிட்டு புதியதாக மேம்பாலம் அமைக்கும் பணியை இரயில்வே துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து 50:50 நிதிப் பங்கீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரயில்வே பகுதி பணியை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை மற்றும் வடிவமைப்பு பணிகள் தயார் செய்யப்பட்டு, இரயில்வே துறை பொது சீரமைப்பு வரைபடத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளது. இரயில்வே துறையிடமிருந்து விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்ட பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அணுகு சாலை பகுதிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பழுதடைந்துள்ள பாலத்திற்குக்கீழ் இரும்பு தூண்கள் நிறுத்தி பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதால் யானைக்கவுனி பாலத்தில் இலகுரக மற்றும் கனரக வாகனப் போக்குவரத்து ஏற்கெனவே தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது பேசின் சாலை மற்றும் இராஜா முத்தையா சாலை, ஈ.வே.ரா. பெரியார் சாலை வழியாகப் போக்குவரத்து திருப்பிவிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது இரு சக்கர வாகனங்கள் செல்வதையும் தடைசெய்ய இரயில்வே நிருவாகம் காவல் துறையை அணுகியுள்ளது. இரயில்வே துறையால் இப்பாலத்தை விரிவுபடுத்துவதற்காக மாதந்தோறும் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதற்கு முன்னர்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்குப் பின்னர் அவர்களுடைய கவனத்திற்கு உடனடியாக கொண்டுபோய் மாதாந்திரக் கூட்டம் நடத்தியிருக்கிறோம். 21–12–2017 அன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் பாலப் பணிகளை விரைவுபடுத்துமாறு இரயில்வே துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அணுகு சாலைப் பகுதிக்கு வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிக்க ஏதுவாக ஆலோசகர்களைச் தேர்ந்தெடுக்க 25–1–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜனவரி 12

கோரப்படவுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் வடிவமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, இரயில்வே துறைமூலம் மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக அணுகு சாலைப் பணிகளும் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) குட்கா பிரச்சினை வழக்கு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் குட்கா பிரச்சினைக் குறித்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வழக்கில், வருமான வரித் துறை ஒரு பதில் மனு தாக்கல் செய்திருக்கிறது. அப்படித் தாக்கல் செய்திருக்கக்கூடிய அந்தப் பதில் மனுவிலே மிகத் தெளிவாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீதிமன்றத்தில் இருப்பதை நாம் எப்படிப் பேச முடியும்? எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதது இல்லை. (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் வருகின்ற மனு குறித்தெல்லாம் எப்படிச் சட்ட மன்றத்தில் நான் எடுத்துக்கொண்டு பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடுகள்) அதை என்னவென்று நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்களும் வக்கீல் வைத்து வாதம் செய்வீர்கள். அதை நீங்கள் நீதிமன்றத்தில்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தினுடைய உத்தரவு ஏதாவது வந்தால் நாம் பார்க்கலாம். நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள பிரச்சினையில் நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) அதை நீங்கள் நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும். நீதிமன்றத்தில் இருப்பது குறித்து நான் என்ன பேச முடியும்? (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தில் இருப்பது குறித்து நீதிமன்றத்தில்தான் பேச வேண்டும்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)